DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.2 |
| Name | :அமுதா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூரில் இருந்து தற்போது உசிலம்பட்டியில் குடியிருக்கிறேன். அ.சா.ஆ.1 எனது கணவர். எனது மகன் பாலாஜி இறப்பதற்கு முன்பு நாடார் சரஸ்வதி மெட்ரிக்குலேசன் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தார். 01.12.2019-ம் தேதி காலை 9.00 மணிக்கு படிக்கபோவதாக வீட்டு மாடிக்கு சென்றார். பின்பு காலை 10.00 மணிக்கு படிக்க சென்ற எனது மகனை சாப்பிட அழைப்பதற்காக எனது கணவர் மாடிக்கு சென்றார். அப்போது எனது மகன் வீட்டு மாடியில் உள்ள பேன் போடும் கம்பியில் சால் போட்டு தூக்கில் தொங்கி கொண்டு இருந்தான் அதை பார்த்த எனது கணவரின் சத்தம் போடவும், நான் மேலே சென்று பார்த்த போது என் மகன் தூக்கில் தொங்கிகொண்டிருந்ததால் நானும் சத்தம் போடவும், அருகில் உள்ள ரெகுபதி, முத்துச்சாமி, லட்சுமணன், கார்த்தி ஆகியோர்கள் வந்து தொங்கிகொண்டிருந்த எனது மகனை கீழே இரக்கினார்கள். எனது மகனின் உயிர் பிறிந்து விட்டதாக கூறினார்கள். என்னுடைய கணவர் இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்பு இறந்த எனது மகனின் உடலை பிரேத பரிசோதகைக்கு போலீசார் அனுப்பி வைத்தார்கள். எனது மகனின் உடலை அடக்கி விட்டு மறுநாள் மகனின் பள்ளிப்புத்தகங்களை சோதனையிட்ட போது எனது மகனின் பள்ளி பேக்கில் இருந்து எனது மகன் எழுதிய ஒரு நோட்டை எனது மகள் எடுத்தார். அதை படித்துப்பார்த்த போது எனது மகனின் இறப்பிற்கு காரணம் இரவி

என்றும், அவன் என்னை கொடுமை செய்தான் அவனுக்கு தண்டணை வாங்கி கொடுங்கள் என எழுதப்பட்டது. அந்த கடிதம் அடங்கிய நோட்டுபுத்தகத்தை என் கணவர் போலீசாரிடம் ஒப்படைத்தார். என்னை போலீசார் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். கடிதத்தை நான் படித்துப் பார்த்தேன். அதில் ஏதாவது தேதி போடப்பட்டிருந்ததா என்றால் போடப்படவில்லை. எனது மகன் பள்ளிக்கு பேருந்தில் வருவானா என்றால் சில நாட்கள் பேருந்திலும், சில நாட்கள் என் கணவர் இரு சக்கர வாகனத்தில் கொண்டு போய் விடுவார். முதலில் என் கணவர் புகார் கொடுக்கும் போது நான் செல்லவில்லை. எனது மகன் தான் வயிற்றுவலியால் அவதிப்பட்டதாக சொல்லியுள்ளானா என்றால் இல்லை. இறப்பதற்கு முன்பாக எனது மகன் எதிரி என் மகனை துன்புறுத்தினார் என்று சொன்னானா என்றால் இறப்பதற்கு 1 மாதத்திற்கு முன்பு எதிரியிடம் டியூசனுக்கு போகவில்லை என்றால் மகனை பெயிலாக்கி விடுவதாக எதிரி சொன்னதாக எனது மகன் என்னிடம் சொன்னார். மேற்படி விபரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என் மகனின் பேக்கில் உள்ள புத்தகங்கள் எதையும் நான் தேடவில்லை என் மகள் தான் தேடி எங்களிடம் காண்பித்தார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் என் மகள் புத்தகத்தை எடுத்து நோட்டையும், நான் பார்ககவில்லை என்பதாலும் இறந்த என் மகன் என்பதால் என் கணவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக எதிரியிடம் பணம் பரிப்பதற்காகவும், பின்னிட்டு அரசியல் வாதிகள் துண்டதலாலும், பொய்யான விபரங்களை உருவாக்கி காவல்நிலையத்தில் சொல்லி எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனது மகன் வயிற்றுவலியின் கொடுமை தாங்கமுடியாமல் தான் தானாக தற்கொலை செய்து கொண்டார் என்றும் அதனை மறைப்பதற்கு எதிரி குற்றம் சாட்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 09.06.2023
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.